

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டிலிருந்து எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண்மணி திருமதி முத்தமிழ்ச்செல்வி, உலகின் ஏழு கண்டங்களிலுள்ள உயரமான மலை சிகரங்களை அடைந்து சாதனை படைத்தமைக்காக சந்தித்து, வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், நபார்டு வங்கி தலைவர் டாக்டர் ஷாஜி சந்தித்து பேசினார். இச்சந்திப்பின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நபார்டு வங்கி தலைமை பொது மேலாளர் ஆர்.ஆனந்த், பொது மேலாளர் எஸ்.எஸ்.வசீஹரன், உதவிப் பொது மேலாளர் எம்.சுந்தரராமன் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், முதல்வரின் முகவரி துறையின் கீழ், மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டம் 15.7.2025 அன்று சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்கப்படவுள்ளதையொட்டி மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 72 அரசு உயர்நிலை - மேல்நிலைப் பள்ளிகளில்

# ரூ.99.35 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூலை 13-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 72 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 99 கோடியே 35 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 403 வகுப்பறைகள், 54 கழிவறைகள், 13 ஆய்வகங்கள், 2 குடிநீர் வசதிகள் என 472 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தார்.**

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காக பள்ளிகளில் இணைய வசதி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழகத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட "இல்லம் தேடி கல்வி",

"நம் பள்ளி நம் பெருமை", "எண்ணும் எழுத்தும்", "நம்ம ஸ்கூல் பவுண்டேசன்", திறன் வகுப்பறைகள் அமைத்தல், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம் அமைத்தல், மாதிரி பள்ளிகளை உருவாக்குதல், பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற சிறப்புத் திட்டங்களோடு, அனைத்து மாவட்டங்களிலும் புத்தக கண்காட்சி, சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் மாபெரும் நூலகங்கள், மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா பாடநூல்கள் மற்றும் கல்வி உபகரணங்களை வழங்குதல் போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களை இவ்வரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டு காலங்களில், ரூ.519.73 கோடி மதிப்பீட்டில் அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 8,209 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (HiTech Lab), ரூ.455.32 கோடி செலவில் அரசுப் பள்ளிகளில் பயிலும் 16,77,043 மாணவர்கள் பயனடையும் வகையில் 22,931 திறன் மிகு வகுப்பறைகள் (Smart Classroom), ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பள்ளி வீதம் ரூ.352.42 கோடி செலவில் 38 மாதிரிப் பள்ளிகள், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1,833.02 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள், குடிநீர் வசதிகள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுசுவர், என மொத்தம் 3160.49 கோடி ரூபாய் செலவிலான பள்ளிக்கல்வித் துறை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது.

**திறந்து வைக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்களின் விவரங்கள்:-**

அந்த வகையில், கடலூர் மாவட்டம் - தாண்டவராயன்பட்டி, பாலூர், இந்திரா நகர், திண்டுக்கல் மாவட்டம் - நத்தம், பழனி, லிங்கவாடி, ஈரோடு மாவட்டம் - பொலவக்காளிபாளையம், அந்தியூர், சிக்கரசம்பாளையம், பி.மேட்டுப்பாளையம், கன்னியாகுமரி மாவட்டம் - ஆரல்வாய்மொழி, அம்மன் திவளை, ஆனக்குழி, வரியூர், கிருஷ்ணகிரி மாவட்டம் - சிங்காரப்பேட்டை, மயிலாடுதுறை மாவட்டம் - தோக்களக்குடி, அச்சல்புரம், வட கரை, கொடக்காரமூலை, குத்தாலம்;

நாகப்பட்டினம் மாவட்டம் - குருக்கத்தி, அம்பை, கோவில்குளம், ஆழியூர், வாழ்குடி, புதுக்கோட்டை மாவட்டம் - ஏம்பல், ஒத்தப்புளி குடியிருப்பு, பெருமாண்டு, கீரனூர், இராமநாதபுரம் மாவட்டம் - கோட்டைமேடு, இருமேனி, பேரையூர், இராணிப்பேட்டை மாவட்டம் - பனப்பாக்கம், ஜாகிர்தண்டலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - தாத்தையங்கார்பேட்டை, நீலகிரி மாவட்டம் - கூடலூர், தேனி மாவட்டம் - அல்லிநகரம், சிலமலை, திருவண்ணாமலை மாவட்டம் - நெடுங்குணம், தாணிப்பாடி, நவபாளையம், தண்டராம்பட்டு, தெள்ளார், அண்டம்பள்ளம், வேட்டாவலம், ஆவூர், வந்தவாசி, திருநெல்வேலி மாவட்டம் - களக்காடு, தூத்துக்குடி மாவட்டம் - ஏரல், கயத்தாறு;

விழுப்புரம் மாவட்டம் - செஞ்சி, கொட்டப்பூண்டி, தேவனூர், விருதுநகர் மாவட்டம் - இராஜபாளையம், விருதுநகர், என். சுப்பையாபுரம், எம்.புதுப்பட்டி, ஆமத்தூர், மல்லாங்கிணறு, புதுசூரங்குடி, காரியாப்பட்டி, கல்லாமனைச் சன்பட்டி, சேவல்பட்டி, விஜயகரி சல்குளம், வெம்பங்கோட்டை, பூவநாதபுரம், திருத் தங்கல், அவியூர், மஸ்தகுறிச்சி, சாலைமறைகுளம்;

ஆகிய 72 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் மொத்தம் 99 கோடியே 35 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 403 வகுப்பறைகள், 54 கழிவறைகள், 13 ஆய்வகங்கள், 2 குடிநீர் வசதிகள் என 472 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மரு. மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் எஸ்.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிதம்பரத்தில் - ஜூலை 15 அன்று

# "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் தொடக்கம்!

## முன்னேற்பாடுகள் தொடர்பாக - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

**சென்னை, ஜூலை 13-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், முதல்வரின் முகவரி துறையின் கீழ், மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டம் தொடங்கப்பட உள்ளதையொட்டி, அதன் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ், ஜூலை 15ம் தேதி முதல் நவம்பர் 2025 வரை மாநிலம் முழுவதும் 10,000 முகாம்கள் நடத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் முதல் முகாமினை, வரும் 15.07.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்க உள்ளார்.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் முதற்கட்டமாக, 15.7.2025 முதல் 15.08.2025 வரை 3570 முகாம்கள் நடத்தப்படவுள்ளன. எனவே இந்த முகாம்கள் நடைபெறும் பகுதிகளில், இத்திட்டம் குறித்த விழிப்புணர்வுப் பணிகள், விண்ணப்பம் மற்றும் தகவல் கையேட்டினை வழங்கும் பணியினை 28,370 தன்னார்வலர்கள், அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து நேற்று முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலிக் காட்சி மூலம் ஆய்வு மேற்கொண்டார்,

இந்த ஆய்வின்போது, முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களில் தன்னார்வலர்களால் இத்திட்டம் குறித்து வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளப்பட்டு வரும் விழிப்புணர்வு பணிகள், வரும் 15 ஜூலை 2025 அன்று தொடங்க இருக்கும் முகாம் தொடர்பான முன்னேற்றப்பணிகள், பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்துதரப்படவுள்ளது குறித்தும் மாவட்ட ஆட்சியர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், பொதுமக்கள் அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகளை, அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே பெற்றுக்கொள்ள வசதியான, அரசின் மிக முக்கியமான முன்னெடுப்பு இத்திட்டம் என்றும், இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது சரியான தீர்வினை வழங்கும் வகையில் அர்ப்பணிப்பு உணர்வுடன் அனைவரும் பணியாற்றிட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், முதல்வரின் முகவரித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர்/சிறப்பு அலுவலர் (மு.கூ.பொ.) திருமதி பெ. அமுதா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில், நேற்று முன்தினம் (11.07.2025) வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் 2025ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்கள், தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

கன்னியாகுமரி மேற்கு மற்றும் திருநெல்வேலி மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 19.07.2025 சனிக்கிழமை | மாலை 6.00 மணி | திருநெல்வேலி மத்திய | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு மற்றும் திருநெல்வேலி மத்திய ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | நாகர்கோவில் | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி, நாகர்கோவில். |
| | மாலை 4.00 மணி | பத்மநாபபுரம் | எம்.கே.ஆடிட்டோரியம், வேர்க்கிளம்பி. |
| 19.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | ராதாபுரம் | எம்.எஸ்.மஹால், வள்ளியூர். |
| 20.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | பாளையங்கோட்டை | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |
| | மாலை 4.00 மணி | திருநெல்வேலி | ஏ.ஆர்.திருமண மண்டபம், சங்கரன்கோவில் சாலை, கானார்பட்டி, மானூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 09.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி